1987 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது செயற் குறிப்பு ஏதும் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. கவன ஈர்ப்பு.

(அ) தஞ்சை மாவட்டம் பாபநாசத்தில் காவலர்களுக்கு குடியிருப்புகள் கட்டுதல்.

திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘‘ தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் பேரூராட்சியில் காவல் துறையினருக்காக குடியிருப்புகள் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கி சுமார் ஆறு ஆண்டுகள் ஆகியும் இன்னும் குடியிருப்பு கட்டப்படாமல் இருப்பது குறித்தும் இதனால் காவல் துறையினர் குடியிருப்புகள் கிடைக்கப்படாமல் துன்புறுவதும் குறித்த’’ அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதல் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

தஞ்சை மாவட்டம் (மேற்கு), பாபநாசம் நகரின் அருகிலுள்ள திருப்பலாத்துறை கிராமத்தில் 1.08 ஏக்கர் நிலம் காவல் துறையினருக்கு குடியிருப்புகள் கட்ட ஆர்ஜிதம் செய்யப்பட்டுள்ளது. இந்த இடத்தில் பாபநாசம் காவல் நிலையத்தில் பணியாற்றும் 1 ஆய்வாளர், 1 உதவி ஆய்வாளர், 3 தலைமைக்காவலர்கள் மற்றும் 20 காவலர்கள் ஆக மொத்தம் 25 நபர்களுக்கு ரூ. 16.40 லட்சம் செலவில் குடியிருப்பு கட்ட காவல் துறை இயக்குநரிடமிருந்து நவம்பர் 1986 இல் செயற்குறிப்பு பெறப்பட்டு அரசின் ஆய்வில் உள்ளது. கட்டிடம் கட்ட அரசு அனுமதி ஏற்கெனவே அளிக்கப்படவில்லை.

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS

திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூபாய் 16.40 லட்சம் செலவில் காவல் துறையின ருக்கு கட்டடம் கட்டுவதற்காக இயக்குநரிடமிருந்து நவம்பர் 1986லேயே அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பப்பட்டிருப்பதாக அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இதுநாள் வரை அதற்கு டெண்டர் விட்டதாகவும் தெரியவில்லை. ஏற்கெனவே கட்டடம் கட்ட அரசு அனுமதி அளிக்கவில்லை என்றும் அறிக்கை யிலே கூறியிருக்கிறார்கள். அப்படி அங்கே கட்டடம் கட்டுவதற் கேற்ற நல்ல இடமாக இல்லாவிட்டால் ஏன் அந்த இடத்தை கையகப்படுத்தினார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, பாபநாசத்தில் கட்டடம் கட்ட இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு, நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக் கிறது. கட்டடம் கட்ட 16.40 லட்சம் ரூபாய் தேவை என்ற செயற் குறிப்பினை அரசுக்கு காவல் துறை இயக்குநர் அனுப்பி யிருக்கிறார். சென்ற ஆண்டு இறுதியில் அது வந்ததால் அந்த நேரத்தில் அதற்கான நிதி ஒதுக்கீட்டை செய்ய முடிய வில்லை. இந்த ஆண்டு அதை நாம் செய்ய வேண்டி வரும். அரசு நிதி ஒதுக்கிய பிறகுதான் டெண்டர் விட முடியும். அதற்குப் பிறகுதான் அங்கே கட்டடம் கட்ட முடியும். அத னால்தான் இதுவரை கட்டடம் கட்டப்படவில்லை. இந்த ஆண்டு அதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும் என்று தெரி வித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். இராசாராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டிலேயே அந்தக் கட்டடம் கட்டப்படு மென்ற உத்தரவாதத்தை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புவதோடு இந்த இடத்தில் சில தனியார்கள் ஆக்கிரமித்திருக்கிறார்கள், அவர்களை உடனடியாகக் காலி செய்யவும் அரசு நடவடிக்கை எடுக்குமா ? அப்படி அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்திருப்பவர்கள் மீது அரசு கிரிமினல் நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

(முற்பகல் 10.50)

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டு இடம் ஆர்ஜிதம் செய்யப்பட்டாகிவிட்டது. காவலர்களுக்கு இடம் கட்டுவது என்று முடிவாகியிருக்கிறது. அதற்கான செயற்குறிப்பை அனுப்பியிருக்கிறார்கள். ஆகவே, நிதி ஒதுக்கீடு செய்ய வேண் டும். நிதி ஒதுக்கீடு செய்ததற்குப் பிறகு டெண்டர் மூலமாகக் கட்டுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். ஆகவே, இந்த ஆண்டு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறதா என்கின்ற விவரக் குறிப்புக்குத் தனியாகக் கேட்டால்தான் சொல்ல முடியும். ஆனால் ஆரம்பக் கட்ட வேலைகள் எல்லாம் முடிவு செய்யப்பட்டு

1987 ஏப்ரல் 25] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

விட்டதன் காரணமாக, அடுத்த கட்ட வேலைகள் நடைபெறுவதில் அதிக சிரமம் இருக்க நியாயம் இல்லை. அநேகமாக இந்த ஆண்டிலே அதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். அந்தக் குறிப்பிட்ட இடம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆகவே, காவலர்களுக்கான இடங்கள் கட்டுவதற்காக ஏற்பட்ட இடத்திலே ஆக்கிரமிப்பு இருந்தால் அது அகற்றப்படும். அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். இல்லாவிட்டால் கிரிமினல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

(ஆ) நிரந்தரமாக்கப்படாத அரசு ஊழியர்களின் நிலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருவாளர்கள் அ. இரகுமான்கான், டி.ஆர். வேங்கடரமணன், ஜே.முகமது கனி ஆகியோர் ஒரே பொருள் குறித்த கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. அ. ரகுமான்கான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''1984ஆம் ஆண்டு செப்டெம்பர் திங்கள் 22ஆம் நாளிட்ட பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறையின் அரசு ஆணை எண் 996ன் படி தற்காலிக ஊழியர்களின் பணி நிரந்தரம் ஆக்கப்பட்டது. நிரந்தரம் ஆக்கப்படாத தற்காலிக அரசு ஊழியர்களின் நிலை குறித்து'' அவசரப் பொது முக்கியத்தும் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

தற்காலிகமாக அரசு அலுவலகங்களில் பணிபுரிந்த இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர்களின் வேண்டுகோளுக்கிணங்க வேலை வாய்ப்பகத்தின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு தமிழ்நாடு அமைச்சுப் பணி/தமிழ்நாடு நீதி அமைச்சுப் பணி ஆகியவற்றில் தற்காலிகமாக வேலை பார்த்து வந்த இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் மற்றும் தலைமைச் செயலக பணியில் தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள் அனைவரையும் 1984ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 25ஆம் நாளன்று அவரவர்கள் பணி புரிந்த துறையிலேயே பணியினை வரன்முறை செய்ய 1984ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 22ஆம் நாளிட்ட அரசு ஆணையின்படி அரசு உத்திரவிட்டுள்ளது.